**கற்பிட்டி பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 19 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கற்பிட்டி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) சபையினால் காணி மற்றும் கட்டிடங்களின் மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா. 78,089,770 கட்டிட நிர்மாணச் செலவுகள் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா. 265,500 பெறுமதியான சொத்துக்கள் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா. 340,996 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா. 557,977 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தலுவை பாலர் பாடசாலை அலுவலக அறை நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்குரிய செலுத்தப்பட வேண்டிய செலவுகள் ரூபா. 273,589 இற்காக நிதிக்கூற்றுக்களில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

08 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி உரிய அட்டவணைகளின் பிரகாரம் பெறுமதிகளுக்கு இடையே ரூபா 2,527,396 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 115,571,695 ஆன பெற வேண்டிய 09 கணக்கு மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 66,214,118 தொகையான செலுத்த வேண்டிய 08 கணக்கு மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா 244,040,377 கூட்டுத்தொகையான 06கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் 129(2)(அ) (ஊ) மற்றும் 150(4), 158 பிரிவுகள் | 17,129,000 | வீதவரி, ஏக்கர் வரி, குத்தகை வாடகை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | | |
| (i) விதி 5(7) | | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 10(4) | | சபையின் உப அலுவலகங்களில் வருமான பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) விதி 69 | | காணி விற்பனைக்கான வரி தொடர்பான பதிவேடொன்று பீ.எஸ் 26 மாதிரியின் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | (iv) விதி 217 | | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீஎஸ் 46 இன் பிரகாரம் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (v) விதி 218 | | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | 685,859 | 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புக்கள் வருமானத்திற்கு எடுப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி செயலாற்றல்

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,987,905 ஆக காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23,079,818 ஆக காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

சபைக்குரிய வங்கி நடைமுறைக் கணக்கில் மாதாந்த வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் காசு மீதியாக ரூபா 17,907 ஆன போலியான மீதியொன்று பதிவுசெய்யப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | ------------ | -------------- | ----------------- | -------------------- | -------------- | -------------- | -------------- | -------------- | -------------- |
| | | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 1,664 | 1,890 | 577 | 10,201 | 1,698 | 1,842 | 1,767 | 8,888 |
| (ii) | வாடகை | 12,139 | 8,737 | 8,076 | 6,865 | 19,892 | 10,627 | 11,780 | 6,204 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 3,800 | 1,693 | 1,693 | 63 | 3,720 | 2,402 | 2,410 | 63 |
| (iv) | ஏனைய வருமானம் | 26,873 | 6,106 | 6,106 | 97 | 76,007 | 5,732 | 5,732 | 97 |

குறிப்பு * ஆண்டில் வருமானத்தில் ஆண்டின் பட்டியலிடப்பட்ட அறவீடுகள் மற்றும் நிலுவை வருமானத்தின் அறவீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

---------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானம் முன்னைய ஆண்டுகளில் நிலுவை வருமானத்துடனான ரூபா 33 மில்லியனால் ரூபா 16 மில்லியன் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 15 மில்லியனான நிலுவை மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 16 மில்லியனாக இருந்தது.

**2.3.3 வீதவரி மற்றும் வரி**

--------------------------------

மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட மற்றும் முன்னைய வருடத்தின் ஆண்டின் நிலுவை மீதியாகிய ரூபா. 10,278,209 இல் 06 சதவீதத்திற்குச் சமனான ரூபா. 546,750 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. ரூபா. 10,000 இனைத் தாண்டிய 27 வீதவரிக் கூறுகளிலிருந்து ரூபா. 437,350 அறவிடப்படாதிருந்ததுடன் புதிய நிர்மாணங்களுக்காக தற்காலிக மதிப்பீட்டின் மீது வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 வாடகை**

--------------

மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் முன்னைய வருடங்களில் நிலுவை வருமானத்துடன் இணைந்ததான ரூபா. 14,952,479 இல் ரூபா. 8,076,477 சேகரிக்கப்பட்டிருந்தது. கடந்த வருட இறுதியில் ரூபா. 6,204,276 ஆகிய நிலுவை மீதி மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 6,865,906 ஆக இருந்தது.

**2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

-----------------------------------------------------

87 வியாபார நிலையங்களில் 1980 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 62,985 தொகையான நிலுவை மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3.6 வேறு வருமானங்கள்

----------------------------------------

சபையின் நீர் செயற்திட்டத்தின் மூலம் சுமார் 200 வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களுக்கு நீர் இணைப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் நீர்க் கட்டணங்கள் அறவிடுகையில் பயன்படுத்தப்பட்ட கூறுகளின் எண்ணிக்கை கருத்திற் கொள்ளப்படாமல் ஒரு வீட்டிற்கு அல்லது வியாபார நிலையத்திற்கு முறையே மாதாந்தம் ரூபா. 30 மற்றும் ரூபா. 75 என பட்டியலிடப்பட்டிருந்தது. கடந்த 12 வருட காலத்தினுள் நீர்க் கட்டணங்கள் செலுத்தப்படாத பாவனையாளர்கள் இனங்காணப்பட்டதுடன் 2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா. 361,713 நீர்க் கட்டணமொன்று நிலுவையாக அறவிடப்பட வேண்டியிருந்தது.

# 03. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------------

## 3.1 செயலாற்றல்

-------------------------

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### (அ) உப விதிகள்

-----------------------

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப உறுப்புரைகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 14 விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

--------------------------------------------------------

விதிக்கப்பட்டிருந்த உப உறுப்புரைகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாமை

-----------------------------------------------------------

தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 42 செயற்பாடுகளில் 16 செயற்பாடுகளுக்காக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### (ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

---------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(i) சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற 07 டொன் கழிவுகளில் 03 டொன் கழிவுகள் கொம்போஸ்ட் தொட்டிக்கு அனுப்பப்படுவதுடன் எஞ்சிய கழிவுகள் வேறுபடுத்தப்படாது வெற்று இடமொன்றில் குவிக்கப்பட்டு வந்துள்ளது.

(ii) கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு மூவிணைப்பு மின்சாரம் வழங்கப்படாதிருந்தமையினால் கழிவுகளை துணிக்கைகளாக்கும் இயந்திரத்தினை செயற்படுத்த முடியாமல் போயிருந்தது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

---------------------------------------------------------------------------

ஐக்கிய நாடுகளின் “நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030” இன் பிரகாரம் இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளின் பிரகாரம் அலுவலக வளவினை நிர்மாணித்தல் மற்றும் முறையாக உத்தியோகத்தர்களை நிலை நிறுத்துதல், அலுவலகத்திற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் வசதிகளை வழங்குதல், வீதி முறைமை அபிவிருத்தி, கழிவுப்பொருள் முகாமைத்துவம், மரவளர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல், --------- பாதுகாத்தல் மற்றும் கடற்கரையைப் பாதுகாத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவற்றின் இலக்குகள் மற்றும் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) களஞ்சியசாலை இருப்பு பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்படாதிருந்ததுடன் களஞ்சியசாலை விநியோகங்கள் முறையான பரிந்துரைகள் மற்றும் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) சபையின் நீர்ப்பாசனத் திட்டத்தின் மொத்த மாதாந்த பற்றுச்சீட்டுப் பெறுமதி ரூபா. 3,860 ஆக இருந்ததுடன் நீர் பம்பியின் மாதாந்த மின்சாரக் கட்டணம் ரூபா. 20,530 இலிருந்து ரூபா. 30,561 இற்கு இடைப்பட்டதாகவிருந்தது. பயன்படுத்தப்படுகின்ற நீர்க் கூறுகளின் எண்ணிக்கைக்கமைய பட்டியல் வழங்கப்படாமை, வருமானம் குறைவதற்குக் காரணமாயிருந்தது.

(இ) சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள 15 முச்சக்கர வண்டித் தரிப்பிடங்களில் 365 முச்சக்கர வண்டிகள் நிறுத்தப்படுவதாக தகவல் வழங்கப்பட்ட போதும் தரிப்பிடக் கட்டணத்தினை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை சபை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள வியாபாரங்களை இனங்கண்டு அவற்றுக்கமைய பட்டியலிடல் வழங்கப்பட வேண்டியிருந்த போதும் பெறப்பட்ட வருமானம் மாத்திரம் கருத்திற் கொள்ளப்பட்டு வருடாந்த பட்டியலிடல் இடம்பெற்றிருந்தது.

(உ) 2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா. 1,968,085 செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள 27 தாடர்பாடல் கோபுரங்களுக்குமான கோவைகள் சபையினால் பராமரிக்கப்பட்டு வந்திருக்கவில்லை. மேலும், 1597/8 இலக்க மற்றும் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் v ஆவது உப பிரிவிற்கமைவாக செயன்முறைக் கட்டணம், இணக்கச் சான்றிதழ் மற்றும் சேவைக் கட்டணம் ஆகியன இக் கோபுரங்கள் தொடர்பில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் சபைக்குக் கிடைக்கப் பெற்றிருந்த 464 கொடிக் கம்பங்களில் வெளி நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 115 கம்பங்களை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது அவற்றுக்கான நட்டதைப் அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கையின் பிரகாரம் நிறைவேற்று தரத்தின் செயலாளர் பதவி, இரண்டாம் மற்றும் ஆரம்ப தர பதவிகளில் முறையே 08 மற்றும் 12 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஆரம்ப தர பதவிகளில் அமைய மற்றும் சமயா சமய ஊழியர் 21 மிகையாக காணப்பட்டனர்.

**(ஆ) ஊழியர் கடன்**

ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச்சென்ற மற்றும் மரணித்த 59 ஊழியர்களிடமிருந்து ரூபா 349,295 ஆன மீதி 03 கடன் மீதிகள் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்**

(அ) ரூபா 18 மில்லியன் அளவில் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த நுரைச்சோலை பொது நூலகத்தின் மேல்மாடி முழுமையாக விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த கழிவுப்பொருள் இயந்திரத்திற்காக தேவையான மின்வசதிகள் இல்லாமை காரணமாக அவ்வியந்திரம் விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) நுரைச்சோலை உப அலுவலக வளவிலும் கழிவுப்பொருள் மீள்சுழற்சி நிலையத்தின் 05 வாகனங்கள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பயன்பாடின்றி காணப்பட்டன.

(ஈ) இரண்டு ஊழியர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட நுரைச்சோலை அலுவலகத்தின் உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

**3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

களஞ்சியத்தின் இருப்பு விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் ரூபா 49,438 ஆன பொருட் குறைவொன்று காணப்பட்டது.

**4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

நிறுவகத்தின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்படாமை<br>(ii) காணி மற்றும் கட்டிடங்கள் வருடாந்தம் கணிப்பீடு செய்யப்படாமை |
| (ஆ) | வருமான நிர்வாகம் | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) | ஆவணங்களின் பராமரிப்பு | பயன்பாட்டு பதிவேடுகளை நாளதுவரையாக பேணப்படாமை |
| (ஈ) | கடன்பட்டோர் / கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (உ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வு தேவைப்பாடு இனங்காணப்படாதிருந்தமை |